Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 25

## பாலகுமாரனின் 'துணை'ப் புதினத்தில் உறவுநிலைச் சித்தரிக்கப்பட்ட விதம்

***பா. செண்பகா***
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*ஜி.டி.என். கலைக்கல்லூரி, திண்டுக்கல்-05*
*மின்னஞ்சல்: shenbaganirmalraj713@gmail.com*

## *முன்னுரை*

பாலகுமாரனின் 'துணை' என்னும் புதினத்தில் காணப்பெறும் உறவுகளைப் பற்றிக் கூறுவதாக இக்கட்டுரை அமைகின்றது. துனிமனிதன் பிறரிடம் கொள்ளுகின்ற உறவின் நெருக்கமும், விலகலும் பற்றி எடுத்துரைப்பதாக அமைகின்றது. கணவன் - மனைவி, தந்தை - மகன், தாய் - மகள், மாமியார் - மருமகள், உடன்பிறப்பினர் உறவு, நட்புறவு போன்ற உறவு முறைகளில் தோன்றும் சிக்கல்களையும் அவற்றிற்குரிய காரணங்களையும் காணலாம்.

## பாலகுமாரன் - அறிமுகம்

பாலகுமாரன் தஞ்சாவூர் மாவட்டத்தில் 5-7-1946இல் பிறந்தார். அவருடைய இயற்பெயர் சனிவாசன் என்பதாகும்;. அவருடைய இளமைக்காலக் கல்வி சிறப்பாக அமையவில்லை. தொடக்கக் கல்வியைச் சென்னையில் பயின்ற அவரால் கல்லூரிப் படிப்பை மேற்கொள்ள இயலவில்லை.1989இல் 'முன் கதைச் சுருக்கம்' என்னும் தலைப்பில் தன்னுடைய வாழ்க்கையை ஒரு புதினம் போல

எழுதி வெளியிட்டுள்ளார். பாலகுமாரன் பிராமணர் இனத்தவராக இருப்பதால் அவருடைய எழுத்துக்களில் பிராமணர்களின் பேச்சும் பழக்கவழக்கங்களும் அதிகமாகக் காணப்படுகின்றன எனலாம்.

## உறவுகள்

மனித மனமானது இன்ப துன்பங்களுக்கு ஆட்பட்டது என்றும் உறவு என்பது மனிதனின் மனத்தோடு தொடர்புடையது என்றும் கூறலாம்.உறவு என்பதனை விளக்கும் பொழுது, “மதம், மொழி, இனம், பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலியவற்றை ஒரே வளையத்திற்குள் வலம் வரச்செய்யும் ஆற்றலின் மறுபெயர்தான் உறவாகும”;1 என்பர்.

மனித மனத்தின் பண்புகள் என்ற மூலதனத்தில் உருவாகும் இந்த உறவு நிலையானதாகவும், நிலைய்றறதாகவும், மனித வாழ்வில் இட்மபெறுகின்றது எனலாம்.

## குடும்பம் - உறவுகள்

குடும்பம் என்ற சொல்லிற்கு விளக்கம் தருகின்ற பொழுது “குடும்பம் என்ற சொல்லிற்கு உறவு என்றும், ஒரு குடியில் உள்ளார், மனைவி, வீடு என்றும் அகராதிகள் பொருளுரைக்கின்றன”.2 மேலும், குடும்ப உறவு பற்றிக் குறிப்பிடும்பொழுது, “மனிதன் அனைவருடனும் இணைந்தே வாழ வேண்டிய சூழலுக்கு ஆட்பட நேர்கிறது, வெளியுலகில் காண நேரிடும் மனிதர்களோடு கொள்ளக்கூடிய உறவு சமுதாயத்தொடர்பாகிறது. தன் வீட்டில் உள்ள உறுப்பினர்களோடு கொள்ளும் உறவு குடும்ப அமைப்பாகிறது. எனவேதான் குடும்பம் என்பது எல்லாச் சமுதாயங்களிலும் உள்ள அடிப்படையான அமைப்பு. சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் குடும்பம் அடிபடையானது. சமுதாய நடவடிக்கைகளுக்குச் சட்ட திட்டங்களை ஏற்படுத்தி இவைகளை;ப பின்பற்றச் செய்கின்றது குடும்பமே”3 என்பர்,

பாலகுமாரன் குடும்பம், இடம், இனம், ஊர் என்ற அடிப்படைக் கூறுகளை மையமாகக் கொண்டு அவற்றின் உள்ளீடுகளாகத் திகழும் செய்திகளையே அவருடைய புதினத்தில் படைத்துக் காட்டுகிறார். எனவே, குடும்பம் என்ற அமைப்பு அவருடைய புதினத்தில் இன்றியமையாத பங்கு வகிக்கிறது எனலாம். பாலகுமாரன் அவருடைய புதினத்தில் கணவன்-மனைவி, தந்தை-மகன், தாய்-மகள், மாமியார்-மருமகள், உடன்பிறப்புக்கள் போன்ற பலவகைப்பட்ட உறவு நிலைகளைக் காட்டி, அவற்றில் எழுகின்ற சிக்கல்களைச் செய்திகளாகக் காட்டுகின்றார். இவ்வுறவு முறைகளின் விளக்கத்தினையும் அவற்றின் உள்ளீடாக

எழுகின்ற சிக்கல்களையும், சிக்கலுக்கான காரணங்களையும் அவரது புதினங்களில் காணமுடிகின்றது.

## கணவன் மனைவி உறவுநிலை

கணவன் - மனைவி உறவு என்பது பல சிக்கல்களை உள்ளடக்கமாகக் கொண்டு உருவாவது. மனைவி என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கணவனும், கணவன் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று மனைவியும் அவரவர் மனநிலையை மையமாக வைத்து நினைப்பதே சிக்கலின் களமாகின்றது. அதனால் தான் "கணவன்-மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் சரிவர உணராமையே இல்வாழ்வு சீக்கெடக் காரணம்"4 என்பர். சிலரிடம் இச்சிக்கல்கள் சிறு ஊடல்களாகவும், சிலரிடம் பெரும் பிளவுகளாகவும் வெடிக்கின்றன எனலாம். எனவே, ஒருவரோடு ஒருவர் இணைவதும், பிரிவதும் அவரவர்க்கு வாய்க்கும் சூழ்நிலையைப் பொறுத்தே அமையும் எனலாம். அவரவரின் எண்ணங்கள், செயல்கள், விருப்பங்கள்,சினம் போன்றவை அதற்குக் காரணிகளாய் அமைகின்றன எனலாம். இவ்வுறவு நிலையினை இரண்டாகப் பகுத்துக் காணலாம்.

1. சிக்கலுடைய நிலை
2. சிக்கலில்லாத நிலை

இந்தச் சிக்கலுடைய நிலையைச்

1. சிக்கல்களால் பிளவின்மை
2. சிக்கல்களால் பிளவுடைமை

என இரண்டாகப் பிரிக்கலாம்.
சிக்கல்களால் பிளவின்மை:

பல சிக்கலில்லாத கணவன்-மனைவி உறவே இல்லை எனலாம். ஆண்டுகளாக உடன் வாழ்வதாலும், குறிப்பிட்ட வயதிற்கு மேல் இவ்வுறவு தொடங்குவதாலும் மனம், பொருளாதாரம், கல்வி, அறிவு போன்றவற்றால் தோன்றும் வேறுபாடுகளாலும் சிக்கல்கள் உருவாகின்றன. கணவன்-மனைவி உறவில் இச்சிக்கல்கள் அவர்களுடைய குடும்ப அக அமைப்பிற்குள்ளேயே அடங்கி விடுமானால் அது சிக்கல்களால் பிளவின்மை அமைப்பிற்கு வழியாகிறது. கணவன்-மனைவி இருவருக்குமிடையே ஒத்த அன்பு நிலையும், விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவமும் இருக்குமாயின் பிளவு என்பது ஏற்படாது என்பதனை ஆசிரியர்,

"வீட்ல ஏகப்பட்ட பிரச்சினை, வறுமை அரிசி பருப்புக்கே திண்டாட்டம். ஆனால் ஒருநாள் கூட அவா சண்டை போட்டு நான் பார்த்ததில்லை. ஒருதடவை கூட எங்கப்பா எங்கம்மாவை திட்டினார்னு முனகினதில்லை."5 என்று சந்திரசேகரன் அவனுடைய பெற்றோரைப் பற்றிக் கூறுவதாக அமைத்துள்ளமை மேற்குறித்த உறவு நிலைக்குச் சான்றாக அமைவதைக் காணமுடிகின்றது.

## சிக்கல்களால் பிளவுடைமை

கணவன் - மனைவி உறவில் தலைதூக்கி நிற்கும் சிக்கல்களை மனத்தில் கொண்டு உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு கணவனோ, மனைவியோ ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வாழ்வது சிக்கல்களால் பிளவு ஏற்படுதல் என்ற வகையில் அடங்கும். வீட்டின் அகப்புறத்தில் நிற்க வேண்டிய சிக்கலைப் பெரிதுபடுத்தி வீட்டின் புறத்திலே வெட்ட வெளிச்சமாக்கி விடுவது சிக்கல்களால் பிளவு ஏற்படும் தலைமைக் கூறுகளில் ஒன்றாகிறது எனலாம். இப்புதினத்தில் வெளிநாட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசையினால் ஒரு இந்திய மணம் இளைஞன் வெளி நாட்டில் பணியாற்றும் ஒரு பெண்ணை முடிக்கின்றான். அவனுடைய ஆசை நிறையேறிய உடன் அவன் மனைவியை விட்டுப் பிரிகின்றான் இதனை,

"அமெரிக்கா முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டு அமெரிக்காவில் ஒன்றுமில்லை. நீ வேலையை விட்டு விட்டு அங்கே வந்துவிடு என்று அவன் கிளம்பிப் போய் விட்டான். இவள் வேலையை விடத் தயாராகயில்லை அவனும் இங்கே வரத் தயாராகவில்லை. அப்படியே அது முடிந்து போயிற்று"6 என்று வசந்தியின் வாயிலாக இதனை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளமையிலிருந்து அறிய முடிகின்றது.

## சிக்கலில்லாத நிலை

கணவன் மனைவி என்ற உறவு புனிதமாகக் கருதப்பட்டுச் சிக்கல்கள் எதுவும் எழாமல் திறம்பட அமைய அன்பே அடிப்படையாகின்றது எனலாம். அன்பு மட்டுமே குடும்பத்தில் தோன்றும் மிகப்பெரிய சிக்கல்களையும் ஒரே நொடியில் மறைய வைப்பதற்குக் காரணமாக அமைகின்றது எனலாம். அத்தகைய நிலையினை ரவிசுப்ரமணியனின் குடும்பத்தின் வழியாக ஆசிரியர், "சில சமயம் கார்லயே காத்துண்டிருப்பேன். சிலசமயம் வீட்டுக்கு வந்துட்டு மறுபடியும் எப்போ கூப்பிடுவான்னு காத்துண்டிருப்பேன். வாசல்ல என் காது எப்பவும் இருக்கும். டெலிபோனை பக்கத்துலேயே வச்சுண்டு தூங்குவேன். நான் வந்துட்டேன் வீட்டு வாசல் கதவை திறங்கோன்னு சொல்லுவா, அதுக்குப் போய் கதவை திறந்து அவகூட கொஞ்ச நேரம் பேசிட்டு அப்புறம்தான் தூங்கப் போவேன்"7 என்று கூறுவதன் வழி அறியமுடிகின்றது. ரவிசுப்பிரமணியம் அவருடைய

மனைவியைப் புரிந்துகொண்டவராகவும்,; அவளுடைய பணிக்குத் துணை செய்பவராகவும் அமைந்ததால் குடும்பத்தில் சிக்கல் எழவில்லை. என்பதை அறிய முடிகின்றது.

## தந்தை - மகன் உறவு

பாலகுமாரன் இப்புதினத்தில் தந்தை - மகனின் அப்பழுக்குடைய உறவு நிலையைச் சுட்டிக் காட்டுகின்றார். "உறவுகள் ஒவ்வொன்றும் அதன் படிப்பினையும் ஆழத்தையும் வைத்துப் புனிதமாகக் கருதப்படுகிறது. அத்தகைய ஒரு புனித உறவுதான் தந்தை - மகன் உறவு. ஒருவர் மீது ஒருவர் செலுத்தும் உறவின் புனிதம் என்பது அன்பினால் தோன்றும் செயல்பாடுகளைக் கணக்கிட்டே அமைகின்றன. சிலருக்கு அந்த உறவு புனிதமாகவும், வேறு சிலருக்கு அது நேர்மாறாகவும் காட்சி அளிக்கின்ற நிலை ஏற்படுகின்றது."8 என்று தந்தை மகன் உறவைச் சோமசுந்தரம் குறிப்பிடுகின்றார். சந்திரசேகரனுடைய தந்தையை தன்னலம் உடையவராகவும், பணத்தைப் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டவராகவும் படைத்துக் காட்டியுள்ளார். அவர் சந்திரசேகரன் கொண்டுவரும் பணத்தின் மீது மட்டுமே கருத்துடையவராக இருந்தார் என்பதை,

அவன் ஏதாவது காசு கொண்டு வந்திருக்கானான்னு கேளு?அப்பா கேட்டார்" கூடகொண்டு வருவேன்னு நினைச்சேன். கொஞ்சம் குறைச்சலா இருக்கே, நிறைய பொருளா வாங்கிட்டியா கேள்வி கேட்டார்"9 என்று ஆசிரியர் சுட்டிக்காட்டுவதன் வழி அறிய முடிகின்றது.

## தூய்மையற்ற தன்மை

"உறவில் தன்னலம் தலைதூக்குமிடங்களில் தூய்மையின்மை தலை தூக்குகின்றது எனலாம். கருத்து முரண்பாடுகளும் அவரவர் கொண்டுள்ள கொள்கைகளுமே உறவில் விரிசலை உருவாக்குகின்றன. அன்பு என்பதை இருசாராரும் பகிர்ந்து கொள்ளாத நிலையும், பேச்சு, செய்கை ஆகிய இரண்டையும் இருபிரிவினரும் சரியாகப் புரிந்து கொள்ளாத நிலையும் தன்னலத்தின் குறுக்கீட்டு நிலையும் தூய்மையற்ற உறவாகத் தந்தை - தனயன் உறவை உருவாக்கக் காரணங்களாக அமைகின்றன"10 என்பர். இத்தகைய தந்தை மகன் உறவுநிலையினையே பாலகுமாரன் அவருடைய புதினத்தில் காட்டியுள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

## தாய் மகள் உறவு

தாயின் மீது அவளுடைய பிள்ளைகள் கொண்ட அன்பு நிலையானது. தாயின் அன்பிற்கு ஈடுஇணை ஏதுமில்லை எனலாம். இப்புதினத்தில்

பாலகுமாரன், தாய் அவளுடைய மகளிடம் தோழியாகப் பழகுவதைத், 'தமிழ் தெரிந்தவனாக இருந்தால் சந்தோஸம் ஐரோப்பியனாக இருந்தால் பரவாயில்லை. உட்கார்ந்து தோசை வார்த்துப் போடுவேன். மாமி ரொம்ப ஜோரா இருக்கு என்று வாய்நிறைய தமிழில் சொன்னால் எனக்கும் மனசு குளிரும்"[11] என்று வசந்தியின் தாய் அவளிடம் பேசுவதன் வழி அறிய முடிகின்றது.

## உடன் பிறப்பினர் உறவு

அக்காள் - தம்பி, அண்ணன் - தங்கை ஆகியோருக்கு இடையே ஏற்படும் உறவுகள் எல்லாம் செழித்தோங்கி வளருகின்ற நிலைகளும், சில பட்டுப்போகின்ற நிலையும் நடைமுறையில் காணக் கூடியனவாகும். இவ்வுறவுகளின் நிலைப்பாடுகளைப் பாலகுமாரன் அவருடைய புதினத்தில் காட்டுகின்றார்.

## அண்ணன்-தங்கை உறவு

சந்திரசேகரன் அவனுடைய தங்கை கற்பகவல்லியிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தான். இருவரும் தங்களுக்குள் நண்பர்களைப் போல அனைத்துச் செய்திகளையும் பகிர்ந்து கொள்கின்றனர். என்பதை, "வேற ஏதாவது வேணுமா குழந்தை தங்கையிடம் பிரியமாகக் கேட்டான். உன் கல்யாணத்தைப் பத்தி நீ முடிவெடு. அதே மாதிரி என் கல்யாணத்தைப் பத்தி நான் முடிவெடுக்கும் போது என் கூட இரு"[12] என்று பாலகுமாரன் குறிப்பிடுவதன் வழி அவர்களுடைய உறவை அறிந்து கொள்ள முடிகின்றது.

## அக்காள் -தம்பி உறவு

அக்காள் தம்பி உறவு இப்புதினத்தில் சிக்கலுடைய அமைப்பாகவே காணப்படுகின்றது. அக்காள் கோமதி அவள், அவளுடைய குடும்பம் என்ற தன்னலம் கொண்டு அவளுடைய தம்பியின் மீதே பொறாமை கொள்கிறாள். அவளுடைய புகுந்த வீட்டைப் பற்றிச் சந்திரசேகரனிடமே குறையும் கூறுவதை,

“நீ கொண்டுவந்து கொடுக்கறா மாதிரி லட்ச லட்சமா என்னால தரமுடியலை. அதனால என் மதிப்பு கம்மியாயிடுத்து, அது தவிர நீ கொண்டுவந்த புடவைக்கும். சென்ட்டுக்கும் நான் ஏங்கி நிக்கறேன். அவா பங்கு குறையுது அதனாலேயும் இளக்காரம் ஆயிடுத்து".[13] என்று கூறுவதன் வழி பாலகுமாரன் படைத்துள்ள அக்காள் - தம்பி உறவுநிலையை அறிய முடிகின்றது.

## மாமியார் - மருமகள் உறவு

இன்றையக் காலத்தில் மாமியார் - மருமகள் இருவருக்குமிடையே சிக்கல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. மாமியார் மருமகளாலோ அல்லது மருமகள் மாமியாராலோ கொடுமைக்கு ஆளாகின்ற நிலையே காணப்படுகின்றது எனலாம். இப்புதினத்தில் இக்கொடுமைகள் எதுவும் சுட்டிக்காட்டப்படாவிட்டாலும், அவர்களுக்கிடையே கருத்தொற்றுமை இன்றி சண்டையே மிகுதியாகக் காணப்படுகின்றது. இதனைக் "கொண்டு போய் உங்காத்துக்கு கொட்டுவான். நீ நன்னா வழிச்சு தின்னுவே என்று அம்மா சொல்ல மன்னிக்கும் அம்மாவிற்கும் மிகப்பெரிய சண்டை வெடித்தது"14 என்று சந்திரசேகரனின் கூற்றாக ஆசிரியர் கூறியுள்ளார்.

## நட்புறவு

நட்பு பற்றி வள்ளுவர்,

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"15

என்று கூறுகின்றார்.

நண்பர்களுக்குள் துன்பம் வருங்கால், தேவையான உதவி செய்து, அவர்களை வாழவைக்க வேண்டியதே ஒரு சிறந்த நண்பனின் கடமை. இத்தகைய உறவு நிலையையே சந்திரசேகரன் ரவிசுப்ரமணியம் ஆகியோரிடையே காணப்படுகின்றது எனலாம்.

"நல்ல உறவுகள் நல்ல நட்புகள் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை ரவிசுப்ரமணியத்தின் தொடர்பு உறுதிப்படுத்தியது."16 என்று சந்திரசேகரன் ரவிசுப்ரமணியத்தின் நல்ல நட்பினை தன் மனத்துள் எண்ணிப் பார்ப்பதாக ஆசிரியர் படைத்துக் காட்டுகின்றார்.

## முடிவுரை

பாலகுமாரனின் 'துணை" என்னும் புதினம் கணவன் - மனைவி, தந்தை - மகன், தாய் - மகள், உடன்பிறந்தோர், நட்பு ஆகிய உறவுகளில் ஏற்படும் வன்மை மென்மைகளைக் கூறுவதாக அமைகின்றது. மேலும் மாமியார் - மருமகள் உறவில் ஏற்படும் சிக்கல்களையும் அறிய முடிகின்றது.

# குறிப்புகள்

1. அ. சோமசுந்தரன், நீல.பத்மநாபன் நாவல்கள் - ஒரு திறனாய்வு, ப. 14.
2. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் மனிதர் வாழ்வியல், ப. 57.
3. கலைக்களஞ்சியம், தொகுதி - 4, ப. 8.
4. கோ.வே. கீதா, தமிழ் நாவல்கள் ஓர் அறிமுகம், ப. 205.
5. பாலகுமாரன்,துணை, ப. 35.
6. மேலது, பக்.54-55.
7. மேலது, ப. 10.
8. அ. சோமசுந்தரன்,மு.நூ., ப. 32.
9. பாலகுமாரன்,மு.நூ., ப. 44.
10. அ. சோமசுந்தரன்,மு.நூ., ப. 40.
11. பாலகுமாரன்,மு.நூ., ப. 44.
12. மேலது,ப. 125.
13. மேலது, ப. 107.
14. மேலது, ப. 179.
15. திருக்குறள்:788.
16. பாலகுமாரன்,மு.நூ., ப. 15.